பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 17 | வெள்ளிக்கிழமை | 03.11.2023 | அதிர்வு 94

# பொலிஸ்மா அதிபரை நியமிப்பதில் இழுபறி

## விக்கிரமரத்னவின் சேவை நீடிப்பு நேற்றுடன் நிறைவுக்கு வந்தது

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட மூன்றாவது சேவை நீடிப்புக் காலம் நேற்றுடன் 08▶

# மலையகத் தமிழ் மக்களை இலங்கை சமூகமாக ஒன்றிணைக்கும் பொறுப்பை நிறைவேற்றுவேன்

## ‘நாம் 200’ நிகழ்வில் ஜனாதிபதி ரணில் உறுதி



“இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பெரும் பணியாற்றிய மலையகத் தமிழ் மக்களுக்கு வேறுபாடுகளைக் காண்பிக்காமல் அவர்களை இலங்கை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளேன்.”

– இவ்வாறு உறுதியளித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

எந்தவொருஇனக்குழுவாகஇருப்பினும் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுப்பதே அரசின் கொள்கையாகும் என்றும், அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு அபிவிருத்தி அடைந்த இலங்கையை 08▶

## இந்திய நிதி அமைச்சரின் வருகையைத் தொடர்ந்து

# சீனத் தூதுவர் யாழ்.விஜயம்




## டில்லியைச் சீண்டிப் பார்க்கும் பீஜிங்

– ந.லோகதயாளன் –

சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் வடக்குக்கு விஜயம் செய்கின்றனர். இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று யாழ்ப்பாணம் வரும் நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை சீனத் தூதுவர் யாழ்ப்பாணம் வருகின்றார். 08▶

# மலையகத் தமிழர்களுக்கு மேலும் 10 ஆயிரம் வீடுகள்

## இந்திய நிதி அமைச்சர் தெரிவிப்பு



“மலையகத் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக இலங்கை அரசுடன் இணைந்து இந்தியா எல்லா வகையான உதவிகளையும் வழங்கும். மலையகத் தமிழ் மக்களுக்காக மேலும் 10 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும்.”

– இவ்வாறு இந்திய நிதி அமைச்சர் 06▶




இன்று எனது பத்தியில்இடம்பெறும்விடயங்கள் ‘ஒரிஜினல்’ என்னுடையவை அல்ல. சமூக ஊடகம் ஒன்றில் அன்பர் ஒருவர் தொகுத்து தந்த விடயங்களை நான் ‘சுட்டு’ வாசகர்களுக்குத் தருகிறேன். அதற்கு முன்னர் மூன்று அம்சங்களை சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்று – இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களின் மத அடையாளங்களைப் பேரினவாதம் ஆக்கிரமித்து 06▶





# 17 அரச பல்கலைக்கழகங்களில் நேற்று விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பு!

பல்கலைக்கழகங்களின் வளப்பற்றாக் குறை, விரிவுரையாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்னி லைப்படுத்தி 17 அரச பல்கலைக்கழ கங்களின் விரிவுரையாளர்கள் நேற்று வியாழக்கிழமை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அரச பல்கலைக்கழகங்களின் கற் பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட் டன.

விரிவுரையாளர்களர்களின் பணிப் புறக்கணிப்பு போராட்டம் தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத் தின் தலைவர் பரண ஜயவர்தன குறிப் பிடுகையில் –

பொருளாதார மீட்சிக்காக அரசாங் கம் எடுக்கும் தீர்மானங்களினால் நாட்டு மக்கள் மிக மோசமாக பாதிக் கப்பட்டுள்ளார்கள். புதிய வரிக் கொள் கையினால் நிறைவடைந்த 10 மாத காலத்துக்குள் மாத்திரம் ஆயிரத்துக்கும் அதிகமான விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

அரச பல்கலைக்கழகங்களில் விரிவு ரையாளர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் உள்ளவர்க ளும் நாட்டை விட்டு வெளியேறுகின் றொயச்ல் பல்கலைக்கழகக் கல்விக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளது.

மறுபுறம் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் மானியங்கள் கட்டம் கட்டமாக வரையறுக்கப்படுகின்றன. எதிர்வரும் கல்வியாண்டுக்குப் பல்கலை கழகங்களுக்கு அதிகளவில் மாணவர் களை இணைத்துக் கொள்ள உத்தே சிக்கப்பட்டுள்ளது. வளப்பற்றாக்குறை காணப்படும் நிலையில் அதிகளவில் மாணவர்களை பல்கலைகழகங்களுக்கு உள்வாங்கினால் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

பல்கலைக்கழகங்களில் நிலவும் இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுகளின் போது எடுத் துரைத்தோம். ஆனால் இதுவரை சாதகமான தீர்வு கிடைக்கவில்லை. ஆகவே, பல்கலைக்கழக கட்டமைப்பை முழுமையாக இல்லாதொழிக்கக்கூடாது என்பதற்காகவே விரிவுரையாளர்கள் நிலையான தீர்வு கோரி பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக ளுக்கு உறுதியான தீர்வு கிடைக்கா வின் எதிர்வரும் நாளஙகளில் கடுமையான தீர்மானங்களை எடுப்போம். – என் றார்.

## வரி மீதியை செலுத்த தவறியமையால்

# 5 மது உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக இரத்து!




வரி மீதியைச் செலுத்தத் தவறிய ஐந்து மதுபான உற் பத்தி நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கலால் ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க, அந்த நிறுவனங்கள் மதுபான உற்பத்தி மற்றும் பொருள்களை விநியோகம் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக நிலுவைத் தொகையை செலுத்தாத நிறு வனங்களின் வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒக்டோபர் 30ஆம் திகதியுடன் காலாவதியாகியிருந்தது.

இந்நிலையில், அவற்றின் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை எனவும் கலால் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து மதுபான உற்பத்தி நிலையங்களில் மது உற்பத்தி நிறுத்தப்பட்டாலும், மதுபான உற்பத்தி நிலையங்கள் அதி கம் உள்ளதால் சந்தையில் மதுவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என அவர் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

**Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living**

+94 777 546 546 | +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# கடற்றொழில், நீரியல் திணைக்களங்களுக்கு சிங்களம் மட்டும் தெரிந்த சாரதிகள் நியமனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்களங்களுக்கு இரு சிங்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளநொச்சி மாவட்ட திணைக்களங்களுக்கே இரு சாரதிகள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இருவருமே சிங்களம் மட்டுமே பேசும் சாரதிகளாக உள்ளனர்.

ஒரு லட்சம் வேலை வாய்ப்புச் செயலணியில் நியமனம் பெற்ற இருவரே இவ்வாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஒரு லட்சம் செயலணியின் மூலம் வடக்கில் நியமிக்கப்பட்ட சிங்கள இனத்தவர்கள் திருப்பி அனுப்பப்படுவர் எனத் தெரிவித்த நிலையில் அமைச்சரின் கூற்றின் பின்பு அமைச்சரின் சொந்த அமைச்சில் அவரது மாவட்டத்திலும் இருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடை மீது மரம் முறிந்து விழுந்ததில் மூவர் படுகாயம்; வாகனங்கள் சேதம்




கண்டி குண்டசாலை – தெல்தெனிய பிரதான வீதியின் வராபிட்டிய பகுதியில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் கடை ஒன்று சேதமடைந்துள்ளது.

அத்துடன் மரம் முறிந்து விழுந்ததில் வீதியில் பயணித்த வான் மற்றும் ஓட்டோவும் சேதமடைந்துள்ளன.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் ஒருவர் உட்பட மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனக் குண்டசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேயிலை செய்கைக்குத் தேவையான உரத்தை உற்பத்தி விலைக்கே விநியோகிக்க இணக்கம்


தேயிலை செய்கைக்கு தேவையான உரத்தை உற்பத்தி விலைக்கே வழங்க அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் இணங்கியுள்ளன.

உரத்தை நிவாரண விலைக்கு வழங்குமாறு தேயிலை உற்பத்தியாளர்களின் சுயாதீன சங்கம், விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அரசாங்கத்திற்கு சொந்தமான லங்கா உர நிறுவனமும் கொமர்ஷல் உர நிறுவனமும் தேயிலை, தெங்கு உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்களுக்கான விசேட கலவை உரங்களை உற்பத்தி செய்கின்றன.

இவை தேயிலை உற்பத்திக்கு மிகப் பொருத்தமானவை. அவற்றை நிவாரண விலைக்கு வழங்க வேண்டும் என இரண்டு உர நிறுவனங்களினதும் தலைவரான கலாநிதி ஜகத் பெரேராவுக்கு அமைச்சர் அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், தேயிலை செய்கைக்கு தேவையான உரத்தை அந்த நிறுவனங்களின் தற்போதைய உற்பத்தி விலைக்கே வழங்குவதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூறையாடுவது குறித்து சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக் குழு சுட்டிக்காட்டி இருக்கின்றது.

அடுத்தது – திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் பெருங்கோயிலாக புனரமைத்து தர இந்தியா கொள்கைய அளவில் சம்மதம் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

மூன்றாவது – திருகோணமலையில் தமிழர்களின் இருப்பைத் தக்க வைப்பதற்கு அவர்களின் மக்கள் பிரதிநிதித்துவம் செயலூக்கம் உள்ளதாக அமைய வேண்டும் என்ற வற்புறுத்தல் வலுத்து வருகின்றது.

இந்த மூன்றின் பின்புலத்தில் இனி அந்த ஆர்வலர் தந்த கருத்துக்களை வரிசைப்படுத்துகிறேன்.:-

+திருகோணமலையில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், கன்னியா வெந்நீர் ஊற்று தொல்பொருள் திணைக்களக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

+ ஶ்ரீமலை நீலியம்மன் சைவக் கோவில் முழுமையாக சிதைக்கப்பட்டு, அங்கு 'பாசன பப்பாத ராஜமஹா' என்கின்ற விகாரையை உருவாக்கி இருக்கின்றார்கள்.

+ குஞ்சுமப்ப பெரியசாமி கோவில் அழிக்கப்பட்டு, அதே இடத்தில "லங்கா பட்டுன சமுத்திரகிரி" என்கிற பெயரில் விகாரையை நிர்மாணித்து இருக்கின்றார்கள்.

+ அரிசிமலையில் தமிழ் நிலங்களில் 'ஆசிரி கந்த புராண ராஜமஹா விகாரை' (Asiri Kanda Purana Rajamaha Viharaya) கட்டப்பட்டு இருக்கின்றது.

+ தென்னமரவடி கந்தசாமி மலை வழிபாடு தடை செய்யப்பட்டு அங்கு பௌத்த கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றது.

+ 64 ஆம் கட்டை (பச்சனூர் மலை) விவசாய நிலங்கள் அபகரிக்கப்பட்டு பௌத்த விகாரை கட்டுப்பட்டு வருகின்றது.

+ பெரியகுளம் பகுதி தமிழர் நிலங்களில் பொரலுகந்த ராஜமகா விகாரையின் கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

+ ராஜவந்தான் மலை கோவில் விக்கிரகங்கள் தோண்டியெறிப்பட்டு அங்கு விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது.

+ மூதூர் சூடைக்குடா மத்தளம் மலை சூழலில் பௌத்த தொல்லியல் சின்னங்கள் இருக்கின்றன எனக் கூறுகின்றார்கள்

+ இந்த வகையில் திருகோணமலையில் 74 இற்கு மேற்பட்ட பிரதேசங்களை பௌத்த மதத்திற்குரிய தொல்லியல் இடங்களாக அடையப்படுத்தி இருக்கின்றார்கள்.

+ இது போதாதென்று திருக்கோணேஸ்வரம் கோவில் சூழல் முழுமையாக சிங்களமயப்படுத்தப்பட்டு இருக்கின்றது. குறிப்பாக, இந்த கோவில் கோகண்ண விகாரை மீதே கட்டப்பட்டுள்ளது என உரிமை கோருகின்றார்கள். இங்கு வியாபாரம் செய்வதற்காக இரத்தினபுரியிலிருந்து சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு இருக்கின்றார்கள்.

+ திரியாய் மற்றும் தென்னமரவடி பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் காணிகளில் தொல்லியல் எச்சங்கள் இருக்கின்றன என்க் கூறி விவசாயம் தடை செய்யப்பட்டு இருக்கின்றது.

+ திரியாய் கிராமத்தில் மட்டும் 1,000 ஏக்கர் வயலில் விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. இந்த கிராமத்தில் 2,712 ஏக்கர் காணியை அரச திணைக்களங்கள் உரிமை கோரி இருக்கின்றன.

+ இதில் மூன்று புதிய பௌத்த விகாரைகளும் ஒரு பழைய பௌத்த விகாரையும் அமைக்கப்பட்டு அவற்றுக்கு 809 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

+ அதே போல கங்குவேலி கிராமத்தில் 500 ஏக்கர் வயல் நிலங்கள் சிங்களவரால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. இங்கு கங்குவேலி குளத்தை சூழ சிங்களவர்கள் விவசாயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றது.

+ குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 2,500 ஏக்கர் நிலப்பகுதி பானமுர திலகவன்ச என்கிற பிக்குவிற்கு வழங்கப்பட்டு இருக்கின்றது.

மூ அதே போல குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் 11 இடங்களில் 340.33 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் 7 பௌத்த அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது.

+ இங்கு 30 க்கும் மேற்பட்ட புத்தர் சிலைகளும் வணக்கஸ்தலங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே இந்த பகுதியில் 23 இடங்களில் பௌத்த கட்டுமானங்கள்முழுமைபெற்றுஇருக்கின்றன.

+ மேற்படி பானமுர திலகவன்ச என்கிற பிக்கு அரிசிமலை என்கிற பகுதியில் மட்டும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து இருக்கின்றார்.

+ இங்கு 500 ஏக்கர் காணி அரசாங்கத்தால் பௌத்த பிக்குகளுக்கு வழங்கப்பட்டு இருந்தது. அதே போன்று அரிசிமலையுள்ள 500 ஏக்கர் காட்டு பகுதியும் பௌத்த தொல்லியலுக்குரிய இடமாகப் பிரகடனம் செய்யப்பட்டு இருக்கின்றது.

+ தென்னைமரவாடி, திரியாய், குரும்பைசிட்டு, புல்மோட்டை போன்ற இடங்களில் உள்ள 11 இடங்களில் தமிழ்ப் பேசும் மக்களுக்கு சொந்தமான நூற்றுக்கணக்கான நிலங்கள் அரச நிலங்களாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

+ தென்னைமரவாடி தமிழ் கிராமங்களில் மாலனூர் (12 ஆம் கட்டை) மற்றும் ஏறமாடு (10 ஆம் கட்டை) இரண்டு சிங்கள குடியேற்ற திட்டங்கள் உருவாக்கபபட்டு இருக்கின்றன.

+ இவ்வாறு கன்னியா, குச்சவெளி, கும்புறுப்பிட்டி, சாம்பல்தீவு, சம்பூர் மத்தளமலை, கல்லடி மலைநீலியம்மன், இலங்கைத்துறை முகத்துவாரம் என பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புகளால் திருகோணமலை மாவட்டம் சீரழிந்து வருகின்றது

– மேற்படி அவலங்களை அரசியல் ரீதியாக வலுமையாக எதிர்க்கொள்ள கூடிய தமிழ் ஆளுமைகளை அரசியல் மற்றும் சிவில் பொதுவெளியில் அடையாளம் காணாமல் திருகோணமலையை யாராலும் காப்பாற்ற முடியாது.

– இதுவே அந்த அன்பரின் கருத்து. அதனை நான் அப்படியே ஆமோதிக்கின்றேன்.

## மலையகத் தமிழர்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற "நாம் 200" நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"200 ஆண்டுகளாக மலையகத் தமிழ் மக்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இலங்கை நாடு நலமாக இருக்க வேண்டும் என்பதற்காக மிகப் பெரிய தொண்டு ஆற்றியுள்ளனர். வலிகளைத் தாங்கிக்கொண்டு தேநீர் என்றாலே இலங்கைதான் என்ற நிலைக்கு இந்நாட்டை உயர்த்தியுள்ளனர்.

மலையக மக்களின் கஷ்டத்தை புரிந்து தான் பல்வேறு திட்டங்களை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார். இதன்படி 10 ஆயிரம் வீட்டு திட்டம் இன்று (நேற்று) ஆரம்பிக்கப்படுகின்றது. கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட உதவிகள் வழங்கப் படும். ஆசிரியர் பயிற்சியும் வழங்கப் படும். இவ்வாறு இலங்கை அரசுடன் இணைந்து மலையக மக்களுக்காக எல்லா வகையான உதவிகளும் வழங்கப் படும்." – என்றார்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தலுக்கு மொட்டு தயாரா?

நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் குறித்தும் இப்போது பேசப்படுகின்றது. வரவு - செலவுத் திட்டத்தில் மொட்டுக் கட்சி ஒத்துழைக்காமல் பிகு பண்ணினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தைக் கலைத்து, முற்கூட்டியே பொதுத் தேர்தலை அறிவித்து விடுவார் என்று அவர் தரப்பிலிருந்து எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. இல்லை, இல்லை ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துங்கள் என்று மொட்டுக் கட்சியே தானாக முன்வந்து வலியுறுத்துவதாகவும் கூடக் கூறப்படுகின்றது.

எது, எப்படி என்றாலும் அடுத்த ஆண்டு ஒக்டோபரில் ஜனாதிபதி தேர்தல் நடப்பது நிச்சயம். அதில் மொட்டுக் கட்சியின் வேட்பாளர் வெற்றி பெறுவதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவு. வரக்கூடிய இன்னொரு ஜனாதிபதி - அவர் மீண்டும் ரணிலாகவோ அல்லது சஜித்தாகவோ அல்லது ஜே.வி.பியின் அனுரகுமாரவாகவோ அல்லது யாராகவோ இருந்தாலும் சரி, அவர் தேர்வானதும் முதல் செய்யப் போகும் விடயம் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடுவதாகவே இருக்கும். அப்போது தனக்கு இணங்கி - இசைந்து - வராத ஒரு ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தின் கீழ் பொதுத்தேர்தலை மொட்டுக் கட்சி எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

அதிலும் விட, இப்போதைய சூழலில் தேர்தலை எதிர்கொள்வது வாய்ப்பானது என்பது மொட்டுக் கட்சிக்கு நன்கு தெரியும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று மொட்டுக் கட்சி தரப்பில் கசிய விடப்படும் கருத்து உண்மையில் அக்கட்சியின் நிலைப்பாடு என்றால், அதைச் செய்வதற்கு மொட்டுக் கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தயவில் தங்கி இருக்க வேண்டும் என்ற தேவை - கட்டாயம் - இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்பாவிட்டால் கூட, அவரையும் மீறி, பொது தேர்தலை ஏற்படுத்த இடம் உண்டு. அதற்கு மொட்டுக் கட்சி இதய சுத்தியுடன் முன்வர வேண்டும்.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் படி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்த வழி செய்ய முடியும். அதற்கு ஜனாதிபதியின் இணக்கம் அவசியமானதல்ல.

ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் உடனடிப் பொது தேர்தலுக்கு வலியுறுத்தி நிற்கின்றன. அந்த வலியுறுத்தலில் மொட்டுக் கட்சியும் இணையுமானால் நாடாளுமன்றக் கலைப்புக்கான பிரேரணையை சட்டபூர்வமான தீர்மானமாக்குவதற்கான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வந்துவிடும்.

உடன் பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்க மொட்டுக் கட்சி தயாரா என்பதுதான் கேள்வி. தயார் என்றால் அது இலகுவாக சாத்தியமான விடயம்.

# டெங்கு காய்ச்சலினால் இவ்வாண்டு 39 பேர் பலி




இந்த ஆண்டில் டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 68 ஆயிரத்து 174 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அந்த எண்ணிக்கை 32 ஆயிரத்து 939 ஆக காணப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் 14 ஆயிரத்து 527 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 14 ஆயிரத்து 34 டெங்கு நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 04 ஆயிரத்து 378 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே, டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அச்சுறுத்தல் காணப்படும் – தெரிவு செய்யப்பட்ட – இடங்களில் இந்த மாத இறுதியில் விசேட பூச்சியியல் ஆய்வொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

# சீனிக்கு விசேட வர்த்தக வரி ஐம்பது ரூபாவாக அதிகரிப்பு



நாட்டில் நேற்று முதல் அமுலாகும் வகையில், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான விசேட வர்த்தக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் சீனிக்கு 25 சதமாக காணப்பட்ட விசேட வர்த்தக பொருட்கள் வரி நேற்று முதல் 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முதல் ஒரு வருடத்திற்கு அமுலாகும் வகையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என நிதியமைச்சு மேலும் கூறியுள்ளது.

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023**

“எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்.”

– தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

## சீனத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது எனக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதுடன், வடக்கு மீன்பிடித்துறையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது எனவும் பரவலான குற்றச்சாட்டுகள் உள்ளன.

அதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது மீன்பிடித்துறையைப் பலப்படுத்த 150 கோடி ரூபாவை சீனா மானியமாக வழங்கியிருந்தது.

வடக்கு மாகாணத்தின் மீன்பிடித்துறையில் சீனாவின் பிரசன்னம் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது எனக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவரும் பின்புலத்தில் வடக்கு மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய 150 கோடி ரூபா நிதியை சீனா வழங்கியுள்ளது.

வடக்கில் சீனா கால்பதிப்பதில் இந்தியா அதிருப்தி கொண்டுள்ள போதிலும், இந்த விடயத்தில் சீனாவின் முயற்சி தொடர்கின்றது.

வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வருவது தொடர்பில் இலங்கை அதிகாரிகளிடம் இந்தியா தமது ஆட்சேபனையைப் பதிவு செய்துள்ள போதிலும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக மீன்பிடித்துறையை மையமாகக் கொண்டு சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

இலங்கைக்கானசீனத்தூதுவர்கிலென் ஹோங் 2021இல் வடக்கு மாகாணத்துக்கு வந்தமை மற்றும் அங்கு மேற்கொண்டிருந்த செயற்பாடுகள் தொடர்பில் இந்தியா அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது.

சீனப் தூதுவர் மற்றும் குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழிபாடு நடத்தியதுடன், உள்ளூர் இந்து பாரம்பரியத்தை பின்பற்றி வேட்டி அணிந்து வெறும் மார்போடு நல்லூரில் வழிபட்டனர்.

யாழ்ப்பாணம் மக்களின் பண்பாட்டு நெறிமுறைகளை ஈர்க்கும் முயற்சியாகவே சீனக் குழுவினர் இவ்வாறு செயல்பட்டிருந்தனர்.

இந்தநிலையில்தான் சீனத் தூதுவரின் இரண்டாவது வடக்கு விஜயம் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

சீனத் தூதுவர் தலைமையிலான இந்தக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆகியோருடன் உத்தியோகபூர்வ சந்திப்புக்களை நடத்தவுள்ளனர்.

சீன அரசின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் நலனோம்புத் திட்டங்களைச் சீனத் தூதுவர் நேரில் சென்று பார்வையிடத் திட்டமிட்டிருப்பதாகச் சீனத் தூதரக வட்டாரங்களில் இருந்து அறியவருகின்றது.

இதேநேரம், இலங்கைக்கான சீனத் தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு மாதாந்தம் ரூபா 6,500 படி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சீனத் தூதுவரின் யாழ்ப்பாணம் விஜயத்துக்கான நிகழ்ச்சி நிரலில் யாழ். பல்கலைக் கழக விஜயம் தவிர்க்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

வடக்கு, கிழக்கில் ஆதிக்கம் செலுத்தும் தமிழ் அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சீனா இங்கு வருவதை விரும்பவில்லை.

இந்தியாவின் நெருங்கிய கடல்சார் அண்டை நாடான இலங்கை, அதனுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு.

ஆனால், இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டு சீனா பின்வாங்கத் தயாராக இல்லை. இந்த இரண்டு மாகாணங்களின் மீன்பிடித் துறையில் மேலும் முதலீடு செய்ய சீனா ஆர்வம் காட்டி வருகின்றது.

அதற்காகவே அண்மையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சீனாவுக்கு விஜயம் செய்திருந்தபோது, "பெல்ட் அண்ட் ரோட்" திட்டத்தின் பத்தாம் ஆண்டு நிறைவைக் கருத்தில் கொண்டு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள மீன்பிடித் துறையினரின் நலனுக்காக சீனா 150 கோடி ரூபாவை வழங்கியது.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவதால் வடக்கில் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது. அதைத் தீர்க்க இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் அரசுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்டுள்ளன.

மீன்பிடி நடவடிக்கைகளில் அதிகரித்த சீனப் பிரசன்னம் நிச்சயமாக இந்தியாவின் கவலைகளை மேலும் அதிகரிக்கும். ஆனால், இலங்கை சீனாவின் உதவிகளை எப்போதும் நிராகரிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகும்.

இந்திய நிதி அமைச்சரின் இலங்கை விஜயம் நிறைவடைந்து ஒருசில நாட்களுக்குச் சீனத் தூதுவர் வடக்கு மாகாணத்துக்குச் செல்வது இந்தியாவை மேலும் அதிருப்திக்குள்ளாக்கும்.

திருகோணமலையை இந்தியா குறிவைத்துள்ள நிலையில் வடக்கைக் குறிவைக்க சீனா எதிர்பார்க்கின்றதா என்ற கேள்வியும் சீனாவின் அண்மைய செயல்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

நிச்சயமாக வடக்கு அரசியலில் மற்றும் பொருளாதாரத்தில் சீனா ஆதிக்கம் செலுத்த இந்தியா அனுமதிக்காது என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸ்மா அதிப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைவடைந்துள்ளது. ஆனால், பொலிஸ்மா அதிபர் பதவிக்கு எவருடைய பெயரும் அரசமைப்புப் பேரவைக்கு இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

பொதுவாக, மூன்று பெயர்கள் அரசமைப்புப் பேரவைக்கு முன்மொழியப்பட வேண்டும். ஆனால், இதுவரை எவரது பெயரும் முன்மொழியப்படவில்லை.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு மூன்றாவது முறை ஜனாதிபதியால் சேவை நீடிப்பு வழங்கப்பட்ட போது அரசமைப்புப் பேரவையின் அனுமதி பெறப்படவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்திருந்தன.

அவருக்கு வழங்கப்பட்ட முதல் மற்றும் இரண்டாவது சேவை நீட்டிப்புகள் தலா மூன்று மாதங்களாகவும் கடைசி சேவை நீட்டிப்பு மூன்று வாரங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டது.

புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான பேச்சுக்களை கடந்த சில நாள்களாக அரசு முன்னெடுத்தது. ஆனால், இதுவரை இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூன்று மூத்த டிஐஜிக்களுக்கிடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது என்று அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான தேசபந்து தென்னக்கோன், லலித் பதிநாயக்க மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோரில் ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட வாய்ப்புள்ளது என்று அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தேசபந்து தென்னக்கோன் புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது எனவும் அறியமுடிகின்றது.

## மலையகத் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டியெழுப்புவதே நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மலையக மக்கள் இந்நாட்டுக்கு வருகைத் தந்து 200 ஆண்டுகள் பூர்த்தியாவதையிட்டு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று மாலை நடைபெற்ற "நாம் 200" நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டிருந்தார்.

நிகழ்வில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மலையகத் தமிழர்கள் பங்குபற்றியிருந்ததோடு, தமிழ் சம்பிரதாய முறைமைகளுக்கமைய ஜனாதிபதிக்குக் கோலாகலமாக வரவேற்பளிக்கப்பட்டது.

இந்நிகழ்வு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொட்டகலை, மவுன்டவுன் தோட்டத்தின் திம்புல கீழ்ப்பிரிவு பகுதியில் இந்திய உதவியில் ஆர்பிக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரால் நிகழ்நிலை முறைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதையடுத்து ஹட்டன் தொழில்பயிற்சி நிலையத்தில்நிர்மாணிக்கப்பட்டகேட்போர் கூடம் மற்றும் கனிணிப் பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வும் நிகழ்நிலை முறைமையில் இடம்பெற்றதோடு, பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது.

இலங்கையில் நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு பெற்றுக்கொடுத்த உதவிகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த உதவி கிடைத்திருக்காவிட்டால் இன்றைய நிகழ்வைக் கூட சாதகமாக நடத்தியிருக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து மலையகத் தமிழ் மக்களின் புதிய வாழ்க்கை பயணம் ஆரம்பிக்கும் என்றும், அவர்களுக்கான காணி உரிமை, கல்வி உரிமை உள்ளிட்ட வரப்பிரசாதங்களை பெற்றுக் கொடுக்க அரசு அர்ப்பணிக்கும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.




# யாழ். பல்கலையில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில் நீதித்துறை சுதந்திரம் குறித்துப் பேசுவது ஒரு முரண்நகை!

## சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் துணைவேந்தருக்குப் பகிரங்கக் கடிதம்

"பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில், நீதித் துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு சட்டத்துறை என்னை அழைத்தது ஒரு முரண்நகை."

– இப்படித் தெரிவித்து சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்குப் பகிரங்கக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கில் "நெருக்கடியான காலங்களில் நீதித்துறை சுதந்திரம்" என்ற தொனிப்பொருளில் சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் கருத்துரை வழங்க இருந்தார்.

அந்நிலையில் அவர் சில தினங்களுக்கு முன்னர் தெற்கில் நடைபெற்ற புத்தக வெளியீடு ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பில் வெளியிட்ட கருத்து சம்பந்தமாகக் கடும் எதிர்ப்புக் கிளம்பி இருந்த நிலையில், பல்கலைக்கழக மாணவர்களும் எதிர்ப்பை வெளியிட்டமையால் சட்டத்தரணியின் கருத்துரை நிகழ்வு இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் சடடத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் துணைவேந்தருக்கு அவ்விடயத்தை ஒட்டி கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

சமகாலப் பிரச்சினைகளுக்கான சட்ட மன்றத்தின் ஒரு பகுதியாக 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி திட்டமிடப்பட்டிருந்த "நெருக்கடியான காலங்களில் நீதித்துறை சுதந்திரம்" என்ற விரிவுரை இரத்து செய்யப்பட்டது தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு எழுதப்படும் கடிதம்.

இந்த விரிவுரை திடீரென ரத்து செய்யப்பட்டது தொடர்பாக எழுப்பப்படும் ஊடகக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்தப் பொதுக் கடிதத்தை எழுதுகிறேன்.

யாழ். பல்கலைக்கழகத்திற்குள் கருத்துச் சுதந்திரம் தொடர்பாக ஏற்பட்ட ஒரு பாரதூரமான பிரச்சினையை எழுப்பவே நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இந்த பொதுக்கடிதத்தை உரிய முறையில் பரிசீலிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

31 ஒக்டோபர் 2023 அன்று "நெருக்கடியான காலத்தில் நீதித்துறை சுதந்திரம்" என்ற தலைப்பில் சட்டத்துறைத் தலைவரால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நான் பேச அழைக்கப்பட்டேன். மூன்று காரணங்களுக்காக நான் உடனடியாக ஒப்புக்கொண்டேன். முதலாவதாக, நான் ஒரு சட்டத்தரணியாக இருப்பதோடு தொடர்ந்து நீதிமன்றங்களோடு ஈடுபாட்டில் இருக்கிறேன். இரண்டாவதாக, இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களை சந்திப்பதற்கும், கருத்துக்கள், கோட்பாடுகள் பற்றியும் அவை நடைமுறையில் எவ்வாறு வெளிவருகின்றன என்பதைப் பற்றியும் கலந்துரையாடுவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்கும் என்று நான் எண்ணினேன். மூன்றாவது, அண்மைக் காலத்தில் சிங்கள தேசியவாதிகளிடம் இருந்து இனரீதியான அச்சுறுத்தல்களின் பிரகாரம் பதவி விலகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜவின் பதவி விலகலுக்குக் காரணமாக இருந்த இன ரீதியான தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்திலும் நான் ஈடுபட்டிருந்தேன்.

ஒக்டோபர் 30 ஆம் திகதி, எனது விரிவுரைக்கு ஒரு நாள் முன்னதாக, நான் பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றப் போவது தொடர்பில் மாணவர் சங்கம் அதிருப்தியை தெரிவித்திருந்தனர் என்று சட்டத்துறைத் தலைவர் என்னிடம் தெரிவித்தார். கடந்த மாதம் நான் ஆற்றிய மற்றுமொரு உரையில் விடுதலைப் புலிகளை ஒரு பாசிச அமைப்பாகக் கட்டமைத்திருந்தேன் என்பதுதான் இந்த அதிருப்திக்கான காரணம் என்று கூறினார். எப்படியிருந்தாலும், விரிவுரை திட்டமிடப்பட்டவாறே இடம்பெறும் என்று அவர் என்னிடம் கூறினார்.

விரிவுரை நடைபெறும் நாளில், பேசுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக, நான் பல்கலைக்கழகத்திற்குள்நுழைவதற்குமாணவர்கள்எதிர்ப்புத் தெரிவித்ததால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் இனி நிகழ்வை நடத்துவது சாத்தியமில்லை என்று சட்டத்துறைத் தலைவர் எனக்கு தெரிவித்தார்.

எனவே பல்கலைக்கழகத்திற்கு வெளியே நிகழ்வை நடத்த கலைப் பீடத்தின் பீடாதிபதி அழைப்பு விடுத்தார் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இடத்தை மாற்றுவதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று துறைத் தலைவரிடம் தெரிவித்தேன். நான் பல்கலைக்கழகத்திற்கு வந்ததும், பீடாதிபதியை சந்திக்க விரும்புவதாகவும் நான் கேட்டுக் கொண்டேன்.

பீடாதிபதியைச் சந்தித்த போது பதில் துணைவேந்தரும் தானும் இந்த நிகழ்வை'ஒத்திவைக்க' முடிவு செய்திருப்பதாகவும், 'அசௌகரியத்தை (unpleasant)'தவிர்க்க விரும்பியதால் அவர்களால் இந் நிகழ்வை நடத்த முடியாது என்றும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களிடம் பேசியதாகவும், எதிர்ப்பை வெளிப்படுத்த மாற்று வழிகளை அவர்களுக்கு அளித்ததாகவும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார். எனினும் இந்த நிகழ்வு தொடரக் கூடாது என்பதில் விடாப்பிடியாக இருந்தனர் என்றும் மாணவர்கள்'தீவிர உணர்வுகளுடன் (extreme emotions)' செயல்படுவதாகவும், அவர்கள்'முதிர்ச்சியற்ற (immature)' முறையில் நடந்து கொள்ளுவதாகவும் அவர் கூறினார்.

நானும் 'அதீத உணர்ச்சிகளின்' கீழ் அறிக்கைகளை வெளியிட்டேன் என்றும், எனது முந்தைய உரையில் விடுதலைப் புலிகளை அந்த வகையில்

(10ஆம் பக்கம் பார்க்க)




# தொற்றாநோய்களைத் தடுப்பது பற்றி மட்டு. செயலகத்தில் கலந்துரையாடல்

(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொற்றா நோய்களைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் மற்றும் வைத்தியர் இ.உதய குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நாட்டில் 83 வீதமான மரணங்கள் தொற்றா நோய்களினால் இடம்பெற்றுள்ளமை தரவுகளுடன் அங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலைகள், அலுவலகங்கள் மற்றும் சமூக மட்டத்தில் உள்ளவர்கள் தமது உடலை வலுப்படுத்துவதற்குத் தேவையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என இங்கு வலியுறுத்தப்பட்டது.

உடற் பயிற்சியின்மை, தவறான உணவு பழக்க வழக்கம், மதுபானம் மற்றும் புகைத்தல் பாவனைகள் மூலம் ஏற்படும் தொற்றா நோய்கள் தொடர்பிலும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போது புகைத்தல் தடை செய்யபட்ட பகுதிகளாக மாவட்டத்தின் பல இடங்களை உள்வாங்குவதற்கும் அங்கு கருத்துகள் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இரத்தினபுரி - கிரியெல்ல வீதியில் ஓட்டோவும் பஸ்ஸூம் மோதி விபத்து



இரத்தினபுரி - கிரியெல்ல பிரதான வீதியில் நேற்று வியாழக்கிழமை பகல் பஸ் ஒன்று ஓட்டோவுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் ஓட்டோச் சாரதி காயமடைந்துள்ளார்.

ஓட்டோச் சாரதி கவனக் குறைவாகச் செலுத்தியதன் காரணமாக விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ். பல்கலையில்.... (09ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் பரந்த அளவில் வர்ணித்திருக்கக் கூடாது என்றும் அவர் கூறினார். என்னுடன் தனக்குக் கருத்து வேறுபாடு இருந்தாலும் என்னை அழைக்கத் தான் முடிவு செய்ததாக அவர் கூறினார்.

பதிலுக்கு, ஒரு நிகழ்வைக் கூட நடத்த முடியாத நிலையில், நான் ‘தீவிரஉணர்ச்சிகளுடன்’ பேசினேன் என எனக்கு விரிவுரை செய்யக்கூடிய ஒரு இடத்தில் அவர் இல்லை என்று நான் பீடாதிபதியிடம் கூறினேன். இந்த நிகழ்வை இரத்துச் செய்ததன் மூலம் பல்கலைகழக நிர்வாகம் புலிகளின் கருத்துக்கு மாறான கருத்துக்களைப் பல்கலைகழகத்திற்குள் அனுமதிக்காது என்ற செய்தியை எனக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் அனுப்பியுள்ளதாக நான் மேலும் கூறினேன்.

பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில், நீதித்துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு சட்டத்துறை என்னை அழைத்தது ஒரு முரண்நகை என்று நான் மேலும் கூறினேன். நிகழ்வைத் தொடருமாறு நான் பீடாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை விடுத்தேன். ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

எனது விரிவுரையை இரத்துச் செய்யும் முடிவை பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்ததன் மூலம், பல்கலைக்கழகத்திற்குள் சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கு எதிராக ஓர் ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

பரந்தளவில், மாணவர் அமைப்பு மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகம், ஜனநாயக வெளியின் மீதான இந்த அப்பட்டமான பாதிப்புக்கு எதிராக ஒரு கொள்கை ரீதியான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்றும், இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் நடப்பதை அனுமதிக்கமாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

எனது பங்கிற்கு, பீடாதிபதி உறுதியளித்த அதே விரிவுரைத் தொடருக்கான “ஒத்திவைக்கப்பட்ட’ அழைப்பிற்காக நான் காத்திருக்கிறேன். இந்த விடயத்தில்தாங்கள்உறுதியானநிலைப்பாட்டை எடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் எனது கருத்தைப் பேசுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இடமளிப்பீர்கள் எனவும், வெவ்வேறு கருத்து நிலைப்பாடுகளை உடையவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எந்தத் தடையும் இல்லாமல் உரையாடல்களிலும், விவாதங்களிலும் ஈடுபடுவதற்கான கலாசாரம் ஒன்று நிலவுவதனை உறுதி செய்வீர்கள் எனவும் நம்புகின்றேன் - என்றுள்ளது.

# மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக கிழக்குப் பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி

## யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் பங்கேற்பு




**-கனகராசா சரவணன், ந.குகதர்சன்-**

கிழக்கில்49ஆவதுநாளாகஉண்ணா விரதம் இருந்துவரும் மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரி வித்தும் மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்று தருமாறு கோரி யும் நேற்று வியாழக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் இருந்து பண்ணையாளர்கள் உண்ணாவிரதமிருக்கும் இடம்வரை ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாத வனை கால்நடைப் பண்ணையாளர் களின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 49 ஆவது நாளாக சித்தாண்டி யில் தொடர்ந்து இடம்பெற்றது.

அவர்களின் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாகவும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இதற்கு அரசு உடன் தீர்வு வழங்க கோரியும் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீட தமிழ் மாணவர்கள் நேற்றுக் காலை 10 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தின் முன்னால் ஒன்றிணைந்தனர்.

இதன்போது “கைது செய்! அம்பிபிட் டிய தேரரை கைது செய்!“, “அடக்காதே, அடக்காதே காவி உடை கொண்டு அடக்காதே!”, “வேண்டும், வேண்டும் நீதி வேண்டும்!”, “கைது செய், சூழ்ச்சிக் காரரைக் கைது செய்!“, “எங்கள் நிலம் எமக்கு வேண்டும்!“, “அத்துமீறிய குடி யேற்றம் வேண்டாம்!”, “தொல்பொருள் என்ற போர்வையில் கோவில்களை இடிக்காதே!”, “வாயில்லா ஜீவனை வதைக்க வேண்டாம்!”, “எங்கள் மேய்ச்சல் தரை எங்கள் சொத்து!” என்பன போன்ற சுலோகப் பதாகைகளை ஏந்தியவாறு, கோஷங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முன்னால் இருந்து அவர்கள் ஆரம்பித்தனர்.

இந்த ஆர்பாட்ட ஊர்வலத்தில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஞானம் சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ப.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் அமைப்பாளர் த.சுரேஸ் போன்றோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் வாழைச்சேனை பிரதான வீதிவழியாக சித்தாண்டியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர் இடத்திற்கு சென்றது.

அவர்களுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குபற்றி, அங்கு கோஷங்கள் எழுப்பியவாறு சுமார் 2 மணித்தியாலம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து பல்கலைககழக மாணவர்கள் கலைந்து சென்றனர்.














# மலையகத் தமிழர்களின் 200 வருடகால வரலாற்றை நினைவு கூரும் கண்காட்சி கல்முனையில் ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

மலையகத் தமிழரின் 200 வருடகால வரலாற்றை நினைவு கூரும் கண்காட்சி நேற்றும் இன்றும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.30 வரை கல்முனை நகரிலுள்ள கிரிஸ்டா மண்டபத்தில் சமூக அபிவிருத்தி நிறுவக பிராந்திய இணைப்பாளர் எம். எஸ். ஜலில் தலைமையில் நடைபெறுகின்றது.

இலங்கை மலையகத் தமிழரின் 200 வருடகான பாரம்பரியத்தை நினைவு கூரும் இந் நிகழ்வை சமூக அபிவிருத்தி நிறுவகம் (ISD) மற்றும் அம்பாறை மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றியம் (TRF) ஆகியன இணைந்து நடத்துகின்றன.

இக்கண்காட்சி நிகழ்வில் மலையக தமிழரின்வரலாற்றுஆவணங்கள்,பொருளாதார, கலை, கலாச்சார, அரசியல் மற்றும் சமூகவியல் தொடர்பான விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றிய இணைப்பாளர் எம்.ஐ. றியாழின் நெறிப்படுத்தலில் இடம்பெறும் இக்கண்காட்சியின் ஆரம்ப நாள் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கரம பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சமூக அபிவிருத்தி நிறுவக நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எல்.எம். லத்தீப், அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரி பீடாதிபதி ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டனர்.


மேலும் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் திட்ட முகாமையாளர் ஜனார்த்தன், கல்வித் திணைக்கள அதிகாரிகள், சுகாதாரதுறை அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றியத்தின் முக்கியஸ்தர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், அட்டாளைச்சேனை கல்வியல் கல்லூரி பயிலுநர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கிராமமட்ட அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வு மலையக தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றைப் பிரதிபலிக்கும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# நீதிமன்ற உத்தரவை மீறி தண்ணிமுறிப்புக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட பேரினத்தவர்கள் தப்பியோட்டம்

## இருவர் மட்டும் சிக்கினர்; 15 மோட்டார் சைக்கிள்களும் மடக்கப்பட்டன

- சண்முகம் தவசீலன் -

தண்ணிமுறிப்புக் குளத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு மீனவர்கள் ஒட்டிசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பலர் தப்பிச் சென்ற நிலையில் அவர்கள் வருகை தந்த 15 மோட்டார் சைக்கிள்களும் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்புக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்கும், ஹிச்சிராபுரம் நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்கும் மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெலிஓயா பகுதியிலிருந்து வருகைதரும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த மீனவர்கள் தொடர்ச்சியாகத் தண்ணிமுறிப்புக்குளத்தில் எந்தவித அனுமதியுமின்றி அத்துமீறி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் தமிழ் மீனவர்களுக்கும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக முரண்பாடு நிலவி வருகின்றது.

இவ்வாறு தண்ணிமுறிப்புக் குளத்தில் கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதியன்று அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மையின மீனவர்கள் 38 பேரையும் அவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய உபகரணங்களுடன் சிறைப்படுத்திய மேற்படி குளத்திற்கு உரித்தான மீனவர்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்திருந்தனர்.

இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபுரம், தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடி சங்கத்தைச் சேர்ந்த மீனவர்கள் விசாரணைக்கு என அழைக்கப்பட்டு, அவர்களில் 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சமாதான சீர்குலைவு என்ற அடிப்படையில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். தமிழ் மீனவர்கள் 17 பேர் மற்றும் பெரும்பான்மையின மீனவர்கள் 38 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இறுதியாக, அனுமதி இல்லாத பெரும்பான்மை இனத்தை சேர்ந்த மீனவர்கள் இனிமேல் இந்தக் குளத்திற்கு மீன்பிடிப்பதற்கு வரமாட்டார்கள் என நீதிமன்றத்தில் தெரிவித்ததன் அடிப்படையில் நீதிமன்றில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சூழலிலேயே அந்தக் குளத்தில் நீதிமன்ற உத்தரவின் பின்னரும் தொடர்ச்சியாக பெரும்பான்மையின மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து, அந்த விடயங்களை நேரில் உறுதிப்படுத்த ஊடகவியலாளர்களை அந்தப் பகுதிக்கு அப்பிரதேச மீனவர்கள் அழைத்திருந்தனர்.

அதன்படி அங்கு ஊடகவியலாளர்கள் நேற்று அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

உடனடியாக பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கங்கத்திற்கும், ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சுமார் இரண்டு மணித்தியாலங்களில் அவ்விடத்திற்கு வருகைதந்த போது அங்கு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு மீனவர்களை க் கைது செய்தனர். ஏனையவர்கள் தப்பித்து சென்ற நிலையில் அவர்களுடைய 15 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் எடுத்து சென்றனர்.


















# இலங்கை - இந்தியா இடையிலான பொருளாதார ஒப்பந்தம் மீள அமுல்

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே 2018 ஆம் ஆண்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் 12ஆவது சுற்றுப் பேச்சு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாட்டின் பிரதான ஏற்றுமதி சந்தைகளை பாதுகாத்து ஊக்குவிப்பதன் மூலம், ஏற்றுமதி பல்வகைப் படுத்தலுக்காக ஆசியா மற்றும் கிழக்காசியாவிலுள்ள மிகப்பெரிய பொருளாதாரங்களுடன் இணைவதே இதன் நோக்கமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜுலை 29 ஆம் திகதி இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, இடைநிறுத்தப்பட்டுள்ள, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மீண்டும் முன்னெடுக்க இருநாட்டு தலைவர்களும் இணங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று தமிழ்ச்செல்வன் நினைவேந்தல்






-எஸ்.நிதர்ஷன்-

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அக்கட்சியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நினைவேந்தல் நடைபெற்றது.

இதன் போது சுடர் ஏற்றப்பட்டு, மலர் மாலை அணிவிக்கப்பட்டு,மலரஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், மகளீர் அணித் தலைவி வாசுகி சுதாகர் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வடக்கில் வைத்தியர்கள் இன்று வேலைநிறுத்தம்



வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அரச வைத்திய அதிகாரிகள் இன்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இதுதொடர்பில் அரசவைத்திய அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“பல மாதங்களாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற இருப்பதையும், அது தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும், அதை தடுப்பதற்குரிய வழி வகைகளைப் பற்றியும் ஆட்சியாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இருப்பினும் இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் உரிய தரப்பினால் மேற்கொள்ளப்படாத நிலையில், ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இதன்படி, இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து நாளை சனிக்கிழமை காலை 8 மணி வரை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளளோம்.

இன்று முன்னெடுக்கப்படவுள்ள இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தின்போது வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் இடம்பெற மாட்டாது.

மற்றும் மகப்பேற்று மருத்துவ சேவைகள், சிறுவர் மருத்துவ சேவைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைகள் இடம்பெறும்.

அரசு எமது முன்மொழிவுகளினூடாக தற்சமயம் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முன் வர வேண்டும். அவ்வாறு தீர்வை வழங்கி வைத்தியர்களை நாட்டில் தக்க வைத்து இலவச சுகாதார சேவையைப் பேணுவதற்குத் தவறும் பட்சத்தில் போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டி ஏற்படும்” – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற பஸ் மதுரங்குளியில் விபத்து







(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பஸ், மதுரங்குளி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

அந்த பஸ் நேற்று மதியம் 12 மணியளவில் மன்னார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து புறப்பட்டு கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது மதுங்குளி பகுதியில் பட்டாரக வாகனம் ஒன்றுக்கு இடம் விடும் போது தடம்புரண்டுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸில் இருந்த பயணிகள் எவருக்கும் எந்தவொரு அசம்பாவிதமும் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பாக மதுரங்குளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆளுநர் ரவிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்: மதுரையில் மார்க்சிஸ்ட் கட்சியினர் கைது!





மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவுக்கு நேற்று சென்றிருந்த தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மார்க்சிஸ்ட் கட்சியினர் கறுப்புக் கொடி ஏந்தியும், கறுப்பு பலூன்களைப் பறக்கவிட்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு அனுமதி மறுத்ததால் பொலிஸாருக்கும், கட்சியினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின்னர் நூற்றுக்கணக்கானோரை பொலிஸார் கைது செய்தனர்.

நீட் தேர்வு விலக்கு உள்ளிட்ட மசோதாக்களில் கையெழுத்திட மறுக்கும் தமிழக ஆளுநர் தமது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தியும், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் என். சங்கரய்யாவுக்கு டொக்டர் பட்டம் வழங்கும் கோப்பில் கையெழுத்திட மறுக்கும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி மதுரையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அறிவித்தது.

அதன்படி, காமராசர் பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவுக்கு சென்ற ஆளுநருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், மதுரை அருகே நாகமலை புதுக்கோட்டையில் நான்குவழிச் சாலை அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதற்கு மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்டச் செயலாளர் கே.ராஜேந்திரன், மாநகர் மாவட்டச் செயலாளர் மா.கணேசன் ஆகியோர் தலைமை வகித்தனர். மூத்த தலைவர் சி.ராமகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர்கள் ரா.விஜய ராஜன், எஸ். கே.பொன்னுத் தாய், எஸ்.பாலா உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க மதுரை புறநகர் - மாநகர் பகுதியிலிருந்து மார்க்சிஸ்ட்கொம்யூனிஸ்ட் கட்சியினர் கட்சிக் கொடிகளுடனும், கறுப்புக் கொடிகளுடனும் காலை 7.30 மணிக்கே திரண்டனர். மதுரை மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் ரா.சிவபிரசாத் தலைமையில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். காலை 9 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டத்தில் ஆளுநருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள் பறக்கவிட்ட கறுப்புப் பலூன்களை பொலிஸார் உடைத்தனர். மாதர் சங்க பெண்கள் கறுப்பு உடை அணிந்தும் வந்திருந்தனர்.

கறுப்புக் கொடி காட்டி யதால் தடுக்க முயன்ற பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே முரண்பாடு, வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோரை பொலிஸார் கைது செய்து நாகமலை புதுக்கோட்டை என். ஜி.ஓ காலனியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர்.

# காங்கிரஸ் ஆட்சியில் வளர்ச்சி இருக்காது: சத்தீஸ்கர் தேர்தல் பிரசாரத்தில் மோடி கருத்து

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் வளர்ச்சி இருக்காது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல்கட்டத் தேர்தல் நவம்பர் 7 ஆம் திகதி 20 தொகுதிகளிலும், இரண்டாம் கட்டத் தேர்தல் நவம்பர் 17 ஆம் திகதி 70 தொகுதிகளிலும் நடைபெற உள்ளன. காங்கிரஸ் ஆட்சி செய்யும் இந்த மாநிலத்தை மீண்டும் பா.ஜ.க. வசம் கொண்டு வர அக்கட்சி தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, சத்தீஸ்கரின் கான்கெர் தொகுதியில் பிரதமர் மோடி நேற்று தேர்தல் பிரசா ரத்தில் ஈடுபட்டார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

சத்தீஸ்கர் மக்களும் பா.ஜ.கவும் சேர்ந்து உருவாக்கியதுதான் சத்தீஸ்கர் மாநிலம். காங்கிரஸ் தலைமையிலான அரசு மத்தியில் இருந்தபோது, அது சத்தீஸ்கரில் அப்போது இருந்த பா.ஜ.க. அரசோடு மோதல் போக்கையே கொண்டிருந்தது.

ஆனால், நாங்கள் தற்போதைய காங்கிரஸ் அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்து மாநிலத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை யாக செயல் பட்டுக் கொண்டிருக்கிறோம்.

சத்தீஸ்கரில் கடந்த 5 ஆண்டுகாலமாக தோல்வி அடைந்த ஆட்சியை காங்கிரஸ் கொடுத்து வருவதை நீங்கள் பார்த்து வருகிறீர்கள்.

இந்தக் காலத்தில், காங்கிரஸ் தலைவர்கள், அவர்களின் உறவினர்கள் மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ளார்கள். அவர்களின் மாளிகைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஆனால், ஏழைகளுக்கு, தலித்துகளுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு என்ன கிடைத்தது? கான்கெர் தொகுதியிலும் எதுவும் கிடைக்கவில்லை. அருகில் உள்ள பஸ்தரிலும் எதுவும் கிடைக்கவில்லை. மோசமான வீதிகள், தரமற்ற மருத்துவமனைகள், பாடசாலைகள் ஆகியவற்றைத்தான் காங்கிரஸ் அரசு அளித்து வருகிறது. தற்போதுள்ள காங்கிரஸ் அரசு, ஊழலில் புதிய சாதனையை படைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல் போர் குற்றங்களுக்கு சமமானது!

## - ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தெரிவிப்பு



காஸாவில் ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல் போர் குற்றங்களுக்கு சமமானது என ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் ஆரம்பமாகி 25 நாட்கள் கடந்துள்ளன. இந்த நிலையில், கடந்த 31 ஆம் திகதி காஸாவின் ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹமாஸின் முக்கிய கமாண்டர் இப்ராஹிம் பியாரி கொல்லப்பட்டார் எனும் செய்தி வெளியாகியது.

எனினும், இந்த தாக்குதலில், இப்ராஹிம் பியாரி உட்பட 50 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பலர் தீவிரவாதிகள் என இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டது. ஆனால், இப்ராஹிம் பியாரி வீழ்த்தப்படவில்லை என்று ஹமாஸ் கூறியது.

அதேவேளை, ஹமாஸ் அமைப்பு சார்பில், 195 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 777 பேர் காயமடைந்துள்ளனர். 120 இற்கும் அதிமானோர் இடிபாடுகளில் சிக்கி இருக்கின்றனர் என தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, ஜபாலியா முகாம் மீதான தாக்குதலுக்கு ஈரான், எகிப்து, ஜோர்தான் போன்ற நாடுகள் கண்டனம் வெளியிட்டன.

இந்த நிலையில், ‘ அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். அங்கு ஏற்பட்டுள்ள அழிவின் அளவைக் கருத்தில் கொண்டு, இவை போர்க் குற்றங்களுக்கு சமமான தாக்குதல் எனக் கருதுகிறோம் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையிலான யுத்தம் தீவிரமடைந்துவருகிறது என்று கூறப்படுகிறது.

இஸ்ரேல் இராணுவத்தின் பீரங்கிகள் வடக்கு காசாவில் ஒரு இடத்தில் மொத்தமாக நிறுத்தப்பட்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகிறது என்று அல் ஜசீரா நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

தரைவழித் தாக்குதலுக்கு மத்தியில் கடந்த சில மணி நேரங்களாக வான்வழித் தாக்குதலையும் இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது.

இஸ்ரேலின் வெளியுறவுத் துறை நிர்வாகி எஜாஸ் ஹைதர் கூறுகையில், ஹமாஸ் இருக்கும் இடத்தை நோக்கி இஸ்ரேல் இராணுவம் பல முனைகளில் இருந்தும் தாக்குதல் நடத்திவருகிறது எனத் தெரிவித்திருக்கிறார். வடக்கு காசாவில் நடைபெற்றுவரும் இந்தச் சண்டையில் பல ஹமாஸ் அமைப்பினர் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டினரும், காயமடைந்தோரும் காஸாவில் இருந்து வெளியேற அனுமதி



இஸ்ரேலின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள காஸாவில் இருந்து பொதுமக்கள் வெளியேற முதன்முறையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டினர், காயமடைந்தோர் மட்டும் காஸாவில் இருந்து எகிப்து செல்ல குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் சிக்கியுள்ள வெளிநாட்டினரும் காயமடைந்துள்ள பாலஸ்தீனர்களும் ராஃபா நகர எல்லை வழியாக எகிப்துக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ள 320 பேர் ராஃபா எல்லை வழியாக எகிப்துக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தவிர, காயமடைந்துள்ள மேலும் 76 பேர் எகிப்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்காக அவசரகால ஊர்திகள் மூலம் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

முதல் கட்டமாக வெளிநாட்டினர் மற்றும் இரட்டை குடியுரிமையுள்ள 500 பேரை எகிப்துக்குள் அனுமதிக்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வெளியேற்றம் இன்னும் சில நாள்களுக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழிக்கும் நோக்கில் காஸா மீது இஸ்ரேல் இராணுவம் கடந்த 26 நாள்களாக தீவிர குண்டுவீச்சு நடத்தி வருகிறது. இதில் ஏராளமான வெளிநாட்டினரும் உயிரிழந்து வருகின்றனர் என கூறப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.11.2023




இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்க ளிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.

இன்று கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.




இன்று உங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசித்து சில நல்ல திட்டங்களை உருவாக்குவீர்கள். உங்கள் தொழில் வட்டாரத்தில் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சிவசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

பணியில் வெற்றி பெறுவதற்கு சிறப்பாக திட்டமிடும் திறமை உங்களிடம் காணப்படும். அதனால் பணிகளை குறித்த நேரத்தில் தரமாக முடித்து தர முடியும்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்ளவும். சரியான புரிந்துணர்வு இருந்தால் உறவு நல்லுறவாக இருக்கும்.

உங்கள் வருமானம் அதிகரிப்பதற்கான வழி காண வேண்டும். ஆடம்பரப் பொருட்களுக்காக பணத்தை அதிகமாக செலவு செய்வதை தவிர்க்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் செயல்களை ஊக்கத்துடன் குறித்த நேரத்தில் செய்வதன் மூலம் சிறந்த பலன்கள் கிடைக்கும். சின்னச் சின்ன விஷயங்களுக்காக மன அமைதியை கெடுத்துக் கொள்ளாமல் விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடமும் கீழ் பணிபுரிபவர்களிடமும் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். இலக்கில் கவனம் செலுத்தினால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியும்.

உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




உங்கள் அனைத்து செயல்களையும் கவனமுடன் செய்வதற்கு உரிய நேரத்தையும் ஆர்வத்தையும் மேற்கொள்ளுங்கள். இதனால் வெற்று கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் ஆற்றல் அங்கீகாரம் பெறும். நீங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயலுங்கள். உங்கள் துணையை வெளியிடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.

உங்கள் செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். உங்கள் பணத்திற்கு பாதுகாப்பு இல்லாத திட்டங்களில் பணத்தை சேமிக்காதீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை கொண்டிருப்பீர்கள். தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சிறப்பான நாளாக இருக்கும். உங்களுக்கு சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இன்று சரியாக முடிவெடுப்பீர்கள்.

நீங்கள் விவேகத்துடன் யோசித்து செயலாற்ற வேண்டும். பொருத்தமான வேலை முறையை கையாளுங்கள். நீங்கள் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். பண வரவு உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படுகின்றது. நன்றாக உண்டு உறங்கி மகிழுங்கள்.




இன்று செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். இன்று மகிழ்ச்சி காரணமாக சிறந்த நிலையில் காணப்படுவீர்கள்.

எந்தவிதமான கவனச்சிதறலுக்கும் இடம் அளிக்க வேண்டாம். பொறுமையுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வங்கியிருப்பு திருப்தியான முறையில் நன்கு பராமரிக்கப்படும்.

இன்று கால் வலி சிறிது தொல்லையைக் கொடுக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க முடியும்.




முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. உங்களுக்கு பயனுள்ள வகையில் இன்றைய நாளை திட்டமிடுங்கள்.

என்ன வேலை செய்ய வேண்டும் என்பத முன்கூட்டியே திட்டமிட்டு பணியாற்றுங்கள். முக்கியமான வேலைகளில் கவனம் செலுத்தி அதனை விரைவாகசெய்து முடியுங்கள்.

பக்குவமான முறையில் பிரச்சினைகளைக் கையாண்டு தேர்க வேண்டும். அமைதியான மனதுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிக்க கடன் வாங்குவீர்கள்.

குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும். இன்று தொண்டை வலிக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணியும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.11.2023




இன்று உங்களுக்கு சிறந்த நாள், முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இன்று மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள்.

உங்கள் முயற்சியின் மூலம் பணியில் நல்ல விளைவுகளைக் காணலாம். உங்கள் கடின உழைப்பு அனைவராலும் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறையால் உங்கள் மீது நல்ல அபிப்பிராயம் ஏற்படும்.

பூர்வீகச் சொத்துக்கள் மூலம் பணம் கிடைக்கும். அதிக அளவில் பணம் சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலன் தரும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். புதிய தொடர்புகள் மற்றும் புதிய நண்பர்கள் அமைத்துக் கொள்ள இன்று உகந்த நாள்.

இன்றைய நாளை பலனுள்ளதாக ஆக்க சிறப்பாக திட்டமிட வேண்டும். உங்களை நீங்கள் வருத்திக் கொள்ளாதீர்கள் அல்லது பணிகளை இழுத்துப் போட்டு செய்யாதீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணம் சம்பாதிக்க விரும்புவீர்கள், உங்களிடம் அந்த ஆற்றல் காணப்படும். நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

இருமல் அல்லது சளி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியம் சுமாராக காணப்படும்.




இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். பதட்டப்பட வேண்டாம். முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டாம்.

உங்கள் பணிகளை திட்டமிடவேண்டியது அவசியம். கவனச் சிதறல்களைத் தவிர்த்தால் பணிகள் விரைவாக முடியும்.

உங்கள் துணையிடம் நேரம் ஒதுக்கி அவர் / அவள் விரும்பும்படி இருங்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

தோள் வலியால் பாதிக்கப்படுவீர்கள். முறையான உடற்பயிற்சி ஆறுதலைத் தரும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொது அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள். இதன் மூலம் கண்டிப்பாக இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

பயணத்தின் போது பணத்தை கவனமாகக் கையாளவும். கையில் அதிக பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.









# இலங்கையை சின்னாபின்னமாக்கி

# அரையிறுதிக்குள் நுழைந்தது இந்தியா

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் இலங்கையை 302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்தியா, முதல் அணியாக அரையிறுக்குள் நுழைந்தது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்களான இந்தியா – இலங்கை அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா நான்கு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

பின்னர் சுப்மன் கில்லுடன் விராட் கோஹ்லி ஜோடி சேர்ந்தார். இருவரும் இலங்கை அணியின் பந்துவீச்சை சின்னாபின்னமாக்கி அரைச்சதம் கடந்தனர். தொடர்ந்து அதிரடியாக விளையாடிய சுப்மன் கில், (92) விராட்கோஹ்லி (88) இருவரும் சதம் அடிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய ஸ்ரேயாஸ் ஐயரும் அதிரடியாக விளையாடினார். மறுபுறம் கே.எல்.ராகுல் (21), சூர்யகுமார் யாதவ் (12) ஆகியோர் ஆட்டமிழந்தனர். சிக்ஸர் மழை பொழிந்த ஸ்ரேயாஸ் ஐயர் 56 பந்துகளில் 82 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 357 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் டில்ஷான் மதுஷங்க 5 விக்கெட்டுகளையும் துஷ்மந்த சமீர ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் 358 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது.

இலங்கை அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய பதும் நிசங்க, கருணாரத்ன இருவரும் ஓட்டம் எதுவும் சேர்க்காமலே ஆட்டமிழந்து சென்றனர்.

பின்னர் களமிறங்கிய வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க, இலங்கை அணி 19.4 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதன் மூலம் இந்திய அணி 302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில், அஞ்சலோ மத்யூஸ் (12) மஹேஸ் தீக்ஷன (12 – ஆட்டமிழக்காமல்), கசுன் ராஜித (14) ஆகியோர் தவிர வேறெவரும் இரட்டை இலக்கை எட்டவில்லை.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் முகமது ஷமி 5 விக்கெட்டுகளையும் சிராஜ் 3 விக்கெட்டுகளையும், பும்ரா, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் முகமது ஷமி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக 7ஆவது வெற்றியைப் பதிவு செய்த இந்தியா, முதல் அணியாக அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இலங்கை அணி பெரும்பாலும் தொடரை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் – நெதர்லாந்து அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 7 | 7 | 0 | 0 | 0 | 14 | 2.102 |
| 02 | தென்னாபிரிக்கா | 7 | 6 | 1 | 0 | 0 | 12 | 2.290 |
| 03 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 0.970 |
| 04 | நியூஸிலாந்து | 7 | 4 | 3 | 0 | 0 | 8 | 0.484 |
| 05 | பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 0 | 0 | 6 | -0.024 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -0.718 |
| 07 | இலங்கை | 7 | 2 | 5 | 0 | 0 | 4 | -1.162 |
| 08 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -1.277 |
| 09 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.446 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.652 |